**மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ 2016**

---

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தொகுதியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 முக்கியத்துவமான விடயம்

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல், துணைக் கம்பனியான எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களிற்கான பின்வரும் குறிப்புக்களின் மீது நான் உமது கவனத்தை ஈர்க்கின்றேன்.

- எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களிலுள்ள 44 ஆம் குறிப்பு.

- ஆண்டின் போது அறிவிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறி காப்புறுதிக் கோரிக்கையொன்றுடன் தொடர்புடைய நிகழத்தக்க பொறுப்புக்களை விபரிக்கின்ற 47.2.2 ஆம் குறிப்பு. இந்த விடயங்கள் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை.

### 2.1.3 ஏனைய விடயம்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீலங்கா கம்பனியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் துணைக் கம்பனியான எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பான முக்கியத்துவமான விடயத்துடன் 2016 மே 18 இல் அந்த நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியற்ற அபிப்பிராயமொன்றை வழங்கியிருந்த வேறொரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.1.4 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

எவ்வாறாயினும், துணைக் கம்பனியின் தேறிய சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விடக் குறைவாக இருப்பதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் மூலதன நிலைமையின் தீவிரமான இழப்பொன்றை எதிர்கொள்ளுகின்றது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

- நிதிக்கூற்றுக்களிற்கான 44 ஆம் குறிப்பில் கலந்துரையாடப்பட்டவாறு, துணைக்கம்பனியானது 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் (திருத்திய) அதிகாரச்சட்டப் பிரமாணத்தின் 53 ஆம் பிரிவிற்கிணங்க இதன் மூலம் நடாத்தப்படுகின்ற நீண்டகால காப்புறுதி வணிகம் மற்றும் பொதுக் காப்புறுதி வணிகம் என்பனவற்றை இரண்டு தனித்தனியான கம்பனிகளாக பிரித்திருக்கவில்லை.

- மொத்தக் கிடைப்பனவு மூலதனத்திற்காக நிர்ணயிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த வேண்டப்பட்ட ஆரம்ப திரவநிலையை ஆயுள் வணிகம் பூர்த்திசெய்திருக்காத போது 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் அதிகாரச்சட்டப் பிரமாணம், “2015 தீர்ப்பனவு எல்லை (இடர் அடிப்படை மூலதனம்) ஒழுங்குவிதி” என்பன மூலம் மூலதன போதுமை விகிதம் மற்றும் மொத்தக் கிடைப்பனவு மூலதனம் என்பவற்றிற்காக நிர்ணயிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த வேண்டப்பட்ட ஆரம்ப திரவநிலையை துணைக் கம்பனியின் ஆயுளற்ற வணிகம் பூர்த்திசெய்யவில்லை.

### 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைப்பிற்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்கி கம்பனி, அதன் துணைக்கம்பனி மற்றும் இணைக்கம்பனி என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை தொகுதி நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு துணைக்கம்பனியான எம்பீஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் 84.12 சதவீத உரிமைத்துவத்தையும் இணைக்கம்பனியான லங்கா செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 29 சதவீத உரிமைத்துவத்தையும் கம்பனி கொண்டிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறும் மேற்படி கம்பனிகளில் உள்ள முதலீடுகளின் நிலைமை பின்வருமாறு உள்ளன.

| கம்பனியின் பெயர் | முதலீட்டின் நிலைமை | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| **துணைக்கம்பனி – விலைகூறப்படாத கம்பனிகள்** | | |
| எம்பீஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட் | 516,096 | 516,096 |
| கழி – நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | (438,790) | (205,899) |
| **துணைக்கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **77,306** | **310,197** |
| **இணைக்கம்பனி – விலைகூறப்படாத கம்பனிகள்** | | |
| லங்கா செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 81,084 | 81,084 |
| கழி – நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | - | - |

| | | |
|---|---|---|
| **இணைக்கம்பனியிலுள்ள தேறிய முதலீடுகள்** | **81,084** | **81,084** |
| **மொத்த முதலீடுகள்** | **158,390** | **158,390** |

**2.3 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) இணங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 40 – முதலீட்டு ஆதனங்கள்**

(i) ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு தடவை முதலீட்டு ஆதனங்களின் பெறுமதிக் கணிப்பீட்டை மேற்கொள்ளுதல் கம்பனியின் கொள்கையாக உள்ளது. எவ்வாறாயினும் கொண்டுசெல்லும் பெறுமதி ரூபா 4,255,554 மற்றும் ரூபா 600,000 ஆக காணப்பட்ட முறையே பிடகோட்டே மற்றும் புத்தளத்தில் அமைந்துள்ள ஆதனங்களின் பெறுமதி கணிப்பீடு கடந்த ஐந்து ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எல்கேஏஎஸ் 40 இனை போல் கம்பனியின் கொள்கையுடன் இணங்காதமை குறிப்பிடப்பட்டது.

(ii) கொழும்பு 11 மற்றும் கோட்டையில் அமைந்துள்ள ஆதனங்கள் கடந்த நிதிக்கூற்றுக்களில் உள்ள முறையே ரூபா 75,000,000 மற்றும் ரூபா 14,727,000 ஆன நியாயப் பெறுமதியை விடக் குறைந்த விலையில் அகற்றப்பட்டிருந்தன. கொழும்பு 11 மற்றும் கோட்டை ஆதனங்களிற்காக பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகள் முறையே ரூபா 36,500,000 மற்றும் ரூபா 6,500,000 ஆக காணப்பட்டன.

**(ஆ) எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் - சொத்துக்கள் பயன்பாட்டிற்கு கிடைக்கபெறுகின்ற போது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமானத்தேய்வை நிறுவனம் ஆரம்பிக்க வேண்டிய போதிலும் பயன்பாட்டிற்காக சொத்துக்கள் கிடைத்த திகதியை கருத்தில் கொள்வதைவிட கொள்வனவு செய்யப்பட்ட மாதத்திற்காக முழுமையாக கம்பனியால் பெறுமனத்தேய்வு வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் தற்போதைய பெறுமானத்தேய்வு முறை எல்கேஏஎஸ் 16 உடன் இணங்கியிருக்கவில்லை.

**2.3.2 நிதி முதலீடு – வியாபாரத்திற்காக இடம்பெற்றது**

நிதிக்கூற்றுக்களிலும் சீடிஎஸ் கூற்றுக்களிலும் பதிவு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கைக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. குறிப்பிட்ட வேறுபாடு காரணமாக ஏற்பட்ட மொத்த நிதி தாக்கம் ரூபா 2,859,524 ஆக காணப்பட்டது.

**2.3.3 ஆண்டிற்கான செலவினமாக ஆரம்ப முற்கொடுப்பனவை இனங்கண்டுகொள்ளாமை**

முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,063,307 முற்கொடுப்பனவு ஆண்டிற்கான செலவினங்களாக இனங்காணப்படாமல் ஏனைய சொத்துக்களின் கீழ் பிரதிபலித்திருந்தது. ஆண்டிற்கான தேறிய இலாபம் போல் ஏனைய சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட முற்கொடுப்பனவு காரணமாக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.3.4 நீண்டகால நிலுவை மீதிகள் மற்றும் எதிர்மறை மீதிகள்**

(அ) ‘‘வங்கித் தவறு’’ என அழைக்கப்பட்ட வரிசை விடயமொன்று வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்பட்டது. கம்பனியானது முறைமைக்கு வைப்புக்களின்

உரிய பெறுவனவுச் சிட்டையை பதிந்திருக்காததுடன் காசோலைகள் திருப்பியனுப்பப்பட்ட போதிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காதமை மேற்படி தவறிற்கான காரணமாக இருந்தது. 2015 ஆம் ஆண்டிலிருந்தான நீண்டகால நிலுவை மீதிகள் "வங்கித் தவறு" எனும் உப தலைப்பின் கீழ் 2016 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்பட்டன.

(ஆ) ரூபா 2,901,626, ரூபா 1,239,871, ரூபா 20,244,936 மற்றும் ரூபா 1,384,151 தொகையான முறையே ஏனைய சொத்துக்களிற்கான ஏற்பாடு, அறவிடமுடியாக் கடனிற்கான ஏற்பாடு, கடன்பட்டோர்கள் மற்றும் பொது முற்பணம் என அழைக்கப்பட்ட நீண்டகால நிலுவை மீதிகள் காணப்பட்டன. எவ்வாறாயினும் மேற்படி மீதிகளின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளதுடன் ஏனைய சொத்து மீதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருக்கக்கூடும்.

(இ) ஏனைய பொறுப்பின் கீழ் அவதானிக்கப்பட்டிருந்த ரூபா 21,103,679 நீண்டகால நிலுவை மீதிகள் முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 6,052,789 தொகையான சில குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகளின் தேறிய வெளிப்படுத்துகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்மறையாக இருந்தது.

### 2.3.5 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(அ) மோட்டார் வாகனம், கணனி உபபாகங்கள், அலுவலக உபகரணம், அலுவலக தளபாடம், பொருத்துகைகளும் பொருத்துக்களும், ஏனைய உபகரணம் மற்றும் தொலைபேசி முறைமை போன்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் வணிகத்தில் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உள்ளபடியான நிலைமையை நிதிக்கூற்றுக்கள் பிரதிபலித்திருக்காது. மேற்படி சொத்தக்களின் மொத்தப் புத்தகப் பெறுமதி ரூபா 236,982,078 ஆக இருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இல. 474, ஹெந்தல வீதியில் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 9,961,400 ஆக இருந்ததுடன் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட உரித்துறுதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 5,906,200 ஆக இருந்தது. ஆகையால் பெறுமதியில் ரூபா 4,055,200 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. ஆகையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | தேவைப்பாடு | இணங்காமை |
|---|---|---|
| (அ) இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிற்கான 2008 இன் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டிணைந்த ஆளுகை) | தலைவர் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லாதவராக இருத்தல் வேண்டும். தலைவர் சுயாதீனமான நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லாதவராக இல்லாத விடயத்தில் | கம்பனியானது தலைவர் சுயாதீனமான நிறைவேற்றுப் பணிப்பாளரல்லாத ஒருவராக இல்லாத போது வருடாந்த அறிக்கையில் சிரேஷ்ட பணிப்பாளர் பதவியை |

| | | | |
|---|---|---|---|
| | நெறிப்படுத்தலின் 7(2) ஆம் பிரிவு | சபையானது சுயாதீனமான நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லாத ஒருவரை மிகவும் சுயாதீனமான அடிப்படையை உறுதிப்படுத்தும் தொடர்பின் பிரகாரம் பொருத்தமானவாறு ஆவணப்படுத்தி சிரேஷ்ட பணிப்பாளராக பதவியில் அமர்த்துதல் வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவி நிதிக் கம்பனியின் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | வெளிப்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிற்கான 2008 இன் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டிணைந்த ஆளுகை) நெறிப்படுத்தலின் 8(3)(உ) பிரிவு | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு நாளதுவரையாக்கப்பட்ட வணிகத்தை தொடர்ந்து பேணுகின்ற திட்டங்களை உள்ளடக்கி இடர் முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்வதற்கு ஆகக் குறைந்தது காலாண்டு ரீதியாக கூட்டத்தை நடாத்த வேண்டும். | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு நிதியாண்டினுள் ஆகக் குறைந்த கூட்டத்தை நடாத்தியிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தொகுதியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 3.28 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 81.14 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 77.86 மில்லியன் அல்லது 2,373.78 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது துணைக் கம்பனி தவிர்ந்த கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான ரூபா 78.31 மில்லியன் ஆன வரிக்கு பின்னரான நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 85.62 மில்லியன் ஆன வரிக்கு பின்னரான இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 163.93 மில்லியன் அல்லது 209.34 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வெவ்வேறு கட்டங்களில் கம்பனி மற்றும் தொகுதியின் நிதி விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | கம்பனி | | | தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | மாற்றம் | 2016 | 2015 | மாற்றம் |
| | ரூபா. 000 | ரூபா. 000 | (%) | ரூபா. 000 | ரூபா. 000 | (%) |
| தேறிய வட்டி வருமானம் | 2,028,170 | 1,939,834 | 4.55 | 2,142,450 | 2,029,708 | 5.55 |
| மொத்த செயற்பாட்டு | 2,178,551 | 2,083,666 | 4.55 | 2,478,337 | 2,579,118 | (3.91) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | | | | | | |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 2,154,312 | 1,621,515 | 32.86 | 2,450,378 | 2,104,500 | 16.44 |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | 239,871 | (35,428) | 777.06 | 246,800 | 56,001 | 340.71 |
| ஆண்டிற்கான இலாபம் | 85,624 | (78,306) | 209.34 | 81,142 | 3,283 | 2,371.58 |

### 3.2 பெறுமதிச் சேர்க்கைக் கூற்று

| | 2016<br>--------<br>ரூபா. மில்லியன் | 2015<br>-------<br>ரூபா. மில்லியன்<br>மீளக் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | | |
| மொத்த வருமானம் | 4,888 | 4,217 |
| கடன் மற்றும் உதவிச் சேவைக் கிரயம் | (3,738) | (2,914) |
| அறவிடமுடியாக்கடன் மற்றும் முதலீடுகளிற்கான ஏற்பாடு | (24) | (462) |
| | **1,126** | **841** |
| **பெறுமதி ஒதுக்கீடு** | | |
| ஊழியர்களிற்கான கொடுப்பனவுகள் | 782 | 671 |
| அரசாங்க வரி | 266 | 100 |
| பெறுமானத் தேய்வு | 78 | 70 |
| | **1,126** | **841** |

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.3.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனியின் இலாபத்தன்மையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சாதகமாக இருந்தது. தேறியலாப விகிதம் கடந்த ஆண்டில் 1.86 தேறிய நட்ட விகிதத்திலிருந்து 1.75 விகிதம் வரை அதிகரித்திருந்தது. மேலும் சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மூலதனம் மீதான திரும்பல் 0.28 எதிர்மறை சதவீதத்திலிருந்து 0.28 நேர்மறை சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ii) தற்போதைய 10.69 மூலதன போதுமை விகிதம் (தட்டு 1+2) 10 சதவீத மத்திய வங்கி ஏற்றுக்கொண்ட விகிதத்தை விட அதிகமாக உள்ளது. இது 2015 ஆம் ஆண்டில் 11.91 சதவீதத்திலிருந்து குறைவடைந்திருந்தது.

(iii) கம்பனியின் வைப்பிற்கான கடன் விகிதம் மீளாய்வாண்டில் 146 சதவீதமாகவும் 2015 ஆம் ஆண்டில் 147 சதவீதமாகவும் காணப்பட்டது. டபிள்யூஏசீசீ 2016 ஆம் ஆண்டில் 11.56 சதவீதமாகவும் 2015 ஆம் ஆண்டில் 9.29 சதவீதமாகவும் காணப்பட்டது.

(iv) கம்பனியானது 2016 ஆம் ஆண்டில் 1.75 சதவீதமும் 2015 ஆம் ஆண்டில் 11.35 சதவீதமுமான உயர் திரவத்தன்மை விகிதங்களைக் கொண்டிருந்ததுடன் கம்பனியானது தொழிற்படு மூலதனத்தை முறையாக முகாமை செய்திருக்காதமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

### 3.4 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் முதிர்வு இடைவெளி பகுப்பாய்வு

கம்பனியானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று மாத காலப்பகுதியை விடக் குறைந்த ரூபா 8,690 மில்லியன் மற்றும் ஒரு ஆண்டினுள்ளே ரூபா 7,681 மில்லியன் தொகையான எதிர்மறை முதிர்வு இடைவெளிகளை கொண்டிருந்தது.

| | கேள்வி தொடர்பானது (ரூபா. 000') | 3 மாதங்கள் வரை (ரூபா. 000') | 3 - 12 மாதங்கள் (ரூபா. 000') | 1 - 3 ஆண்டுகள் (ரூபா. 000') | 3 - 5 ஆண்டுகள் (ரூபா. 000') | 5 ஆண்டுகளை விட அதிகமானது (ரூபா. 000') |
|---|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | 696,887 | 3,424,244 | 9,880,192 | 12,119,796 | 4,245,398 | 1,259,025 |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 2,305,268 | 10,505,738 | 8,871,677 | 5,594,070 | 1,048,331 | 3,608,644 |
| முதிர்வு இடைவெளி | (1,608,381) | (7,081,494) | 1,008,515 | 6,525,726 | 3,197,067 | (2,349,619) |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கடன்கள் மற்றும் முற்பணங்கள்

4.1.1 கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 3,405 மில்லியன் அல்லது 13.77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தனிப்பட்ட கடன்கள் இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்ததுடன் இவ் வகைப்படுத்தல் மீதான கருத்துரைகள் பின்வருமாறு உள்ளன. தனிப்பட்ட கடன் திட்டம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,376 மில்லியனிலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,681 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இது ரூபா 2,305 மில்லியன் அல்லது 97 சதவீத அதிகரிப்பாக இருந்தது. ஆகையால் இந்த ஆண்டினுள் தனிப்பட்ட உத்தரவாதக் கடன்களை வழங்கியதன் மூலம் உயர் இடர் ஒன்றை கம்பனி எடுத்திருந்ததுடன் இது கம்பனியின் எதிர்கால அறவீடு மற்றும் நிதிக் கிரயத்தை முகாமை செய்தல் என்பவற்றிற்கு பாதகமாக தாக்கமளிக்கக்கூடும்.

4.1.2 குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட உள்ளபடியான தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 19 சதவீதம் மற்றும் 25 சதவீதத்தால் பாதீடு செய்யப்பட்ட தொகையை விட உயர்வாக இருந்தது. வங்கியானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய உண்டியல்களின் கீழ் இலக்கிடப்பட்ட தொகையை விட 46 சதவீதம் அதிகமாக விநியோகித்திருந்தது. பாதீடானது முறையான முகாமைத்துவ கருவியொன்றாக வங்கியால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.1.3 கம்பனியின் தங்க நகை கடன் நடைமுறைகளின் பிரகாரம் தங்க நகை கடன் வசதியானது தற்போதைய தங்க நகை பெறுமதியின் 85 சதவீத எல்லையினுள் வழங்கப்பட வேண்டும். ஆனால் அதன் சந்தைப் பெறுமதியின் 85 சதவீதத்தை விட அதிகமாக வாடிக்கையாளர் கோரினால் அது கடன் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சந்தைப் பெறுமதியின் 85 சதவீதத்தை விட அதிகமாக தங்க நகை கடன் முகாமையாளரால் கடன்கள் வழங்கப்பட்டிருந்த சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. கடன் குழுவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் வாடிக்கையாளர்களிற்கு சந்தைப்

பெறுமதியின் 85 சதவீதத்தை விட அதிகமாக முற்பணங்களை வழங்குதல் கம்பனியின் கடன் இடரை அதிகரிக்கும்.

4.1.4 செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் செயற்பாடற்ற கடன் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 13.26 சதவீதத்திலிருந்து 9.27 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்பாடற்ற கடன்களின் நட்டக் கழிவு மேவுகை 2015 ஆம் ஆண்டில் 6.06 சதவீதமாகவும் 2016 ஆம் ஆண்டில் 3.82 சதவீதமாகவும் காணப்பட்டது.

(ii) செயற்பாடற்ற கடன் விகிதத்தை குறைப்பதற்கான பிரதான காரணம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 445 மில்லியன் தொகையான பதிவழிக்கப்பட்ட மூலதனம் காணப்பட்டது.

(iii) 5.3 சதவீத சந்தை செயற்பாடற்ற கடன் விகிதத்துடன் ஒப்பிடும் போது மேற்படி செயற்பாடற்ற விகிதம் தற்போதும் உயர்வாக காணப்படுகின்றது. இது கம்பனிப் பங்கின் சந்தை விலை 2014 ஆம் ஆண்டில் ரூபா 17.5 இலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 13.60 வரை குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,860,584 தொகையான பதினைந்து செயற்பாடற்ற பதவியணியினர் கடன்கள் காணப்பட்டதுடன் மேற்குறிப்பிட்ட தொகையில் ரூபா 7,144,638 அல்லது மொத்த பெறவேண்டியவைகளில் 91 சதவீதம் 2007, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நான்கு பதவிநிலை உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய உண்டியல்கள் ரூபா 874 மில்லியனாக இருந்தது. மொத்த நிலுவையில் ரூபா 199.9 மில்லியன் அல்லது 22.87 சதவீதம் செயற்பாடற்ற வகைப்படுத்தலில் காணப்பட்டது.

4.1.5 ஆதனம் ஈடுவைப்பதற்கு எதிராக 1994 ஏப்ரல் 1 இல் ரூபா 14 மில்லியன் வசதி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி வசதியை அறவீடு செய்யும் நோக்கத்திற்காக 1996 செப்தெம்பர் 4 இல் மேற்படி வாடிக்கையாளரிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அவ் ஆதனம் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2005 யூன் 16 இல் நடைபெற்ற ஏலத்தில் கம்பனியானது ௌள்வனவாளர்களை கொண்டிருக்காததன் காரணமாக ரூபா 3 மில்லியன் பெயரளவுப் பெறுமதியில் ஆதனத்தைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி சொத்து வாகன முற்றமாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் கம்பனி ஆதனமாக கருதப்பட்டு/ கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்குறிப்பிடப்பட்ட உண்டியல்கள் மேற்படி ஆதனத்தின் தற்போதைய சட்ட நிலைமையை கருத்தில் கொள்ளாமல் 2016 ஆம் ஆண்டின் போது (12 ஆண்டுகளின் பின்னர்) பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவக் குறைபாடுகள்

கடன்களை வழங்கும் போது பிணைகளின் சந்தைப்படுத்தல் தன்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, பாதுகாப்பு மற்றும் மாற்றக்கூடிய தன்மை என்பவற்றை கம்பனி மதிப்பீடு செய்திருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் போது வங்கியானது தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 28.11 மில்லியன் பெறுமதியான லொறி, ஜீப், கார் போன்ற 6 வாகன பிணைகளின் கீழ் ரூபா 33.25 மில்லியன் மொத்த கடன் தொகையை வழங்கியிருந்தது.

(அ) முதலீடுகளின் செயற்திறனற்ற முகாமைத்துவம் மற்றும் பங்குச் சந்தையை துல்லியமாக கண்காணிக்காமை காரணமாக விலைகூறப்பட்ட பங்குகளின் முதலீடானது 2016 ஆம் ஆண்டில் ரூபா 31.364 மில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 24.07 மில்லியன் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) ஆதனம் மற்றும் உபகரணம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தச் சொத்துக்களில் 0.99 சதவீதமாக காணப்பட்டதெனக் குறிப்பிடப்படுகின்றது. இது ரூபா 11.3 மில்லியன் தேறிய புத்தகப் பெறுமதியை உள்ளடக்கிய ஒரு ஆதனம் மாத்திரமேயாகும். வெளித் தரப்பினர்களுடன் வாடகைக்கு லழங்கப்பட்ட ஆதனங்களின் கீழ் அனைத்து கிளைகளும் வைத்திருக்கப்படுகின்றன. ஆகையால் கம்பனியானது ஆண்டின் போது அனைத்துக் கிளைகளிற்காக வாடகை செலவினமாக ரூபா 60.130 மில்லியன் செலவிட்டிருந்தது. தலைமை அலுவலக செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 62.573 மில்லியன் கிரயத்தை செலவிட்டு கொள்ளுப்பிட்டியவிலுள்ள வாடகைக் கட்டிடத்தின் கீழ் நடைபெறுகின்றன.

(இ) எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் 84.12 சதவீத பங்குரிமையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 516 மில்லியனை கம்பனி முதலீடு செய்திருந்தது. எவ்வாறாயினும் துணைக்கம்பனி அதன் செயற்பாடுகளிலிருந்து தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தது. ஆகையால் கம்பனி காலத்திற்குக் காலம் அதன் முதலீடுகளை நட்டக்கழிவு செய்திருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 237.89 மில்லியன் நட்டக்கழிவு ஏற்பாட்டை கம்பனி செய்திருந்ததுடன் திரண்ட ஏற்பாடு ரூபா 438.79 மில்லியனாக இருந்தது. அத்துடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டு மீதி ரூபா 77.31 மில்லியனாக இருந்தது.

எவ்வாறாயினும் கம்பனியின் பணிப்பாளர் சபை துணைக் கம்பனியின் பங்குரிமை முழுவதையும் நீக்குவதற்கான தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்தது. மேலும் தொடர முடியாத செயற்பாடாக இதனை கருத்தில் கொள்வதற்கு அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கொடுக்கல் வாங்கல் முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனி கிளை வலையமைப்பு நாடளாவிய ரீதியாகவுள்ள 49 கிளைகளை உள்ளடக்கியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது புதிய கிளை எதனையும் வங்கியால் திறக்க முடியாதிருந்தது. மேற்குறிப்பிடப்பட்டதில் 21 கிளைகள் அல்லது 41 சதவீதம் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளன.

## 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

(அ) 2003 யூன் 3 ஆம் திகதிய 2 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் நல்லாளுகை கைநூலின் 9.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் பொதுத் திறைசெரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி மேற்படி தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்காததுடன் தரம் ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் பதவியணிச் செலவினங்கள் 2016 ஆம் ஆண்டில் 52 சதவீதமாகவும் 2015 ஆம் ஆண்டில் 51 சதவீதமாகவும் இருந்ததுடன் கம்பனியின் கடந்த இரண்டு

நிதியாண்டுகளின் போது மொத்த செலவினங்களின் முக்கிய பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. அத்துடன் மொத்த செலவினத்தில் ஐம்பது சதவீதத்தை விடக் கூடுதலாக உள்ளது.

**4.4 கம்பனியின் வாடிக்கையாளர் வைப்புக்கள்**

கம்பனியின் வாடிக்கையாளர் வைப்புக்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது.

| | 2016/12/31 இல் உள்ளவாறு (ரூபா. '000) | 2015/12/31 இல் உள்ளவாறு (ரூபா. '000) | மாற்றம் (ரூபா. '000) | (%) |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புக்கள் | 17,790,162 | 15,153,099 | 2,637,063 | 17.40 |
| சேமிப்பு வைப்புக்கள் | 728,257 | 693,207 | 35,050 | 5.06 |
| மொத்தம் | 18,518,419 | 15,846,306 | 2,672,113 | 16.86 |

(அ) வாடிக்கையாளர் வைப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,672 மில்லியன் அல்லது 16.86 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வைப்புக்களில் தொண்ணூற்று ஆறு சதவீதம் கம்பனியின் நிலையான வைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(ஆ) ரூபா 15,608 மில்லியன் தொகையான மொத்த வைப்புக்களின் 84.29 சதவீதம் ஒரு வருட காலப்பகுதியினுள் முதிர்வடையும். எவ்வாறாயினும் ஒரு வருடத்தினுள் முதிர்வடையும் மொத்த நிதிச் சொத்துக்கள் ரூபா 14,001 மில்லியன் தொகையாக காணப்பட்டன. ஆகையால் ஆண்டிறுதியில் வாடிக்கையாளர் வைப்புக்களுடன் ஒப்பிடும் போது ரூபா 1,607 மில்லியன் முதிர்வு ஒத்திருக்காத தொகையொன்று காணப்பட்டது.

(இ) மேலும் முதல் பத்து வைப்பாளர்களிடம் ரூபா 4,883 மில்லியன் தொகை காணப்பட்டதென குறிப்பிடப்பட்டதுடன் இது கம்பனியின் மொத்த வைப்பாளர்களில் 26.35 சதவீதமாக இருந்தது. குறைந்த வாடிக்கையாளர் வைப்பு அடிப்படையில் தங்கியிருப்பதால் கம்பனிக்கு உயர் இடர் காணப்படுகின்றதுடன் இவ் நிலையான வைப்புக்களை பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவிற்கான உயர் வட்டி வீதத்தை தாங்கிக்கொள்வதுடன் கம்பனியினுள் அவை தொடர்ந்திருந்தன.

**4.5 கம்பனியின் தேறிய வட்டி வருமானம்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 3,405 மில்லியன் வரை அல்லது 13.77 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் வட்டி வருமானம் ரூபா 665 மில்லியன் அல்லது 16.32 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. ஆகையால் கம்பனியின் தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ரூபா 89 மில்லியன் வரை அல்லது 4.59 சதவீதம் வரை மாத்திரம் அதிகரித்திருந்தது.

**5. கம்பனியின் சந்தைப் பங்கு**

**5.1 வைப்புக்கள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சந்தைப் பங்கு**

2016 ஆம் ஆண்டில் கம்பனியின் மொத்த வைப்புக்களின் சந்தைப் பங்கு மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சந்தைப் பங்கு என்பன முறையே 3.49 சதவீதம் மற்றும் 3.22

சதவீதம் ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் அவை 3.29 சதவீதம் மற்றும் 3.42 சதவீதமாக காணப்பட்டன.

**5.2 கம்பனியின் பிற்ச் தரப்படுத்தல்கள் (Fitch ratings)**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்ச் உள்ளூர் தரப்படுத்தலானது கம்பனியின் (ஐசீஆர்ஏ லங்கா லிமிட்டட்) தரம் ஏ (grade A) ஆக உள்ளது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் வங்கியின் தலைவரிற்கு வழங்கப்பட்ட எனது விபரமான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | கடன் நிர்வாகம் | - செயற்பாடற்ற முற்பண விகிதம் |
| | | - உயர்வான செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் மற்றும் கிளைகள் |
| | | - பதிவளிக்கப்பட்ட கடன்கள் |
| (ஆ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | - பதவியணிச் செலவினங்கள் |
| | | - பதவியணியினரிற்கான அங்கீகாரம் |